**8.7 பணியாளர் குழு – ஊராட்சி ஒன்றியங்கள் – இறந்த ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் செய்யப்பட்ட நியமனங்கள் – வரன் முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண். 54 நாள் : 12.02.1988.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண் 888 ஊரக வளர்ச்சி, நாள் : 8.6.19840.
2. அரசாணை (நிலை) எண். 763 ஊரக வளர்ச்சி, நாள் : 29.9.86.
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண். ந.க. 8747/ஊ2/85 நாள் : 6.3.1985.

**ஆணை :**

பணிக் காலத்தில் இறந்த அரசு அலுவலர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்கும் சலுகை ஊராட்சி ஒன்றியப்பணியாளர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்ட பின்னர் மிகக் குறைந்த எண்ணிக்கைகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களையும் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுகளின் கல்வி மற்றும் வயதுத் தகுதிகளையும் கருத்தில் கொண்டு, இவர்களுக்கும் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் எல்லைக்குட்பட்ட பணியிடங்களில் வேலை வாய்ப்பளிக்க பார்வை ஒன்றில் கூறப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

**2.** ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசுப் பணிக்குக் கொண்டு வரப்பட்ட நாளான **1.6.1981–**க்கு முன்னர் இறந்து போன ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் வாரிசுதாரர்கட்கும், **8.6.84** நாளிட்ட ஊரக வளர்ச்சி உள்ளாட்சி துறையின் அரசு ஆணை எண். **888** வெளியீடு முன்னர் இறந்து போன ஏனைய ஊராட்சி ஒன்றிய பணியாளர்களின் வாரிசுகட்கும், கருணை அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குட்பட்ட பணியிடங்களில் நியமனம் செய்யலாம் என்பதைக் குறித்து அரசு மறு பரிசீலனை செய்தது. மேற்கண்ட செயற்குறிப்பை நடைமுறைப்படுத்த விதிகளில் இடமில்லாததால் **1.6.1981–**க்கு முன் அதாவது ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு முன், பணியில் இருக்கும் போது இறந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களில் வாரிசுதாரர்களுக்கும், **1.4.1974**க்கு முன் ஊராட்சி ஒன்றிய பணியாளர்களாக காசாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், தலைமை எழுத்தர், போன்றவர்கள் பணியில் இருக்கும் போழுது இறந்த அன்னாரின் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களில்தான் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமேன பார்வை இரண்டில் கண்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. இந்த ஆணையின்படி ஊராட்சி ஒன்றியம் பணியாளர்களின் (அரசு அலுவலர்கள் தவிர) வாரிசுகளுக்கு ஊராட்சி பணியிடங்களில் மட்டும் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது).

**3.** பத்தி இரண்டில் கூறப்பட்ட ஆணை வெளியிடப்பட்ட தேதிக்கு முன்னர் இறந்த சில ஊராட்சிப் பணியாளர்களின் வாரிசுகளுக்கும் அரசுப் பணியிடங்களில் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டது. இவ்வாறு செய்த நியமனங்களை தேர்வாணைக்குழுவின் இசைவு பெற்று வரன்முறை செய்ய ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு பார்வை மூன்றில் கூறப்பட்ட கடிதத்தில் அரசுக்கு ஒரு கருத்துருவை அனுப்பியுள்ளார்.

**4.** ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை அரசு ஆழ்ந்து பரிசீலனை செய்தது. ஊராட்சிப் பணியாளர்களின் வாரிசுகளில் சிலர் அரசுப் பணியிடங்களில் குறிப்பாக ஏழு ஆண்டுகளுக்கு மேலாக பணி நீக்கம் அல்லது பதவி மாற்றம் செய்தால் அவர்களும் அவர்களது குடும்பங்களும் துயர நிலை, மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதனால் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தில் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தின் தன்மையே நிறைவேறாது. எனவே **29.9.1986**க்கு முன்னர் ஊராட்சிப் பணியைச் சார்ந்த மறைத்

ஊழியர்களின் வாரிசுகளாக அரசுப்பணியிடங்களில் நியமிக்கப்பட்ட இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்களின் பதவிகளை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக்குழுவின் இசைவினைப் பெற்று அவரவர்களுக்கு சம்பந்தப்பட்ட ஆணை வெளியிடப்படும் தேதியிலிருந்து வரன்முறை செய்ய அரசு ஆணை வெளியிடுகிறது.

5. இந்த ஆணை வேலை வாய்ப்பு மற்றும் பணி மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைகளின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. அவைகளின் அலுவல் சார்ப்பற்ற எண். 117/பி1/88–1 நாள் 14.1.88/4032/88–1 நாள் 28.1.88.

(ஆளுநரின் ஆணைப்படி)

**வி. சந்திரலேகா,**
ஆணையர் மற்றும் செயலர்